ஆதிதிராவிடர் நல இயக்குநரின் நேர்முக உதவியாளர் அவர்களின் செயல்முறைகள், சென்னை–5.

முன்னிலை: திரு.சு.பார்த்திபன், BSc.,

ந.க.எண். இ6/18330/2009 நாள். 28.04.2023.

பொருள்: பணியாளர் தொகுதி–ஆதிதிராவிடர் நல இயக்குநரகம் – கருணை அடிப்படையில் பணி நியமனம் – இளநிலை உதவியாளர் – திருமதி.போ.ஆஞ்சல்மேரி (எ) அஞ்சலி என்பவரது பணிவரன் முறை செய்து ஆணையிடுதல் – சார்பு.

பார்வை:
1. ஆதிதிராவிடர் நல ஆணையரின் செயல்முறைகள் ந.க.எண்.இ5/11429/2022 நாள்.05.07.2022.
2. அரசாணை நிலை எண்.33 பணியாளர் நலம் மற்றும் திறன் மேம்பாட்டு (Q1) துறை நாள்.08.03.2023.
3. தொடர்புடைய ஆவணங்கள்.

******

ஆணை:–

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், கல்லாலிப்பட்டு அரசு ஆதிதிராவிடர் நல ஆரம்பப்பள்ளி இடைநிலை ஆசிரியராக பணிபுரிந்து 24.03.2005 அன்று பணியிடையே மரணமடைந்த திரு.அ.போஸ் என்பவரது மனைவி திருமதி.போ.ஆஞ்சல்மேரி (எ) அஞ்சலி என்பவருக்கு பார்வை 1ல் காணும் செயல்முறைகள் படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் வழங்கப்பட்டு ஆதிதிராவிடர் நல இயக்குநரகத்தில் இளநிலை உதவியாளராக 12.07.2022 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார்.

இந்நிலையில், பார்வை 2–ல் காணும் அரசாணையில் கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்ற பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்வது தொடர்பாக எந்த வித விதி தளர்வும் தேவையில்லை எனில் பணி நியமன அதிகாரியே சம்மந்தப்பட்டவர்களின் பணியினை வரன்முறை செய்து ஆணையிடலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நேர்வில் ஆதிதிராவிடர் நல இயக்குநரகத்தில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் பெற்று 12.072022 முற்பகல் முதல் பணிபுரிந்து வரும் திருமதி.போ.ஆஞ்சல்மேரி (எ) அஞ்சலி என்பவர் அப்பணியிடத்திற்கான உடற்தகுதியைப் பெற்றிருக்க வேண்டும் எனும் நிபந்தனைக்குட்பட்டு, அன்னாரது பணியினை அவர் பணியேற்ற நாளான 12.07.2022 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது. இவ்வாறு வரன்முறை செய்யப்படுவதால் திருமதி.போ.ஆஞ்சல்மேரி (எ) அஞ்சலி இளநிலை உதவியாளர் என்பவர் ஆண்டு ஊதிய உயர்வு பெற விதிகளின் படி தகுதியுடையவராகிறார்.

ஆதிதிராவிடர் நல இயக்குநரின்
நேர்முக உதவியாளர்.

<u>பெறுநர்.</u>
போ.ஆஞ்சல்மேரி (எ) அஞ்சலி
இளநிலை உதவியாளர்,
ஆதிதிராவிடர் நல இயக்குநரகம்.
சென்னை–5.